1970 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, குறைந்த விலை கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சர்க்காரே அறிக்கை விட்டிருக்கிறார்கள். அப்படி ஏதாவது புகார் இருந்து, நிரூபித்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவசாயிகள் தாங்களாகவே வந்து குறைந்த விலைக்குத் தொழிற்சாலையில் கொடுக்கிறார்களே தவிர, யாரும் கட்டாயப்படுத்தி அவர்களை அப்படிச் செய்யச் சொல்லவில்லை. குறைந்த விலை இருக்கக்கூடாது என்று மத்திய அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அப்படி ஏதேனும் புகார்கள் இருந்தால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

சமூகநல ஊழியர்கள் சம்பளம்.

* 455 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரிசனநல இலாக்காவில் சமூக நல ஊழியர்களாக (Social Workers Male and Female) பணியாற்றுபவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்! நிருவாக வசதியை முன்னிட்டுத் தென்னாற்காடு, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் அரிசன நலத் துறையில் சமூக நல ஊழியர்களாகப் பணிபுரிபவர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சபாநாயகரவர்களே, எல்லா வேலைகளையும் மேற்பார்வையிடுவது ஹரிஜன இலாக்கா ஆபீசர்களாக இருப்பதால் சம்பளம் மட்டும் ஏன் அங்கு கொடுக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல, சோஷியல் ஒர்க்கர்ஸ்களில் அதிக அதிகாரம் உள்ள ஆண்களுக்கு 100 ரூபாய் என்று குறிப்பிட்டும், பெண்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அதிகமான ரூபாயும் வைத்திருக்கிறார்களே, எனவே பெண்களுக்குக் கொடுப்பதைப்போல், ஆண்களுக்கும் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தச் சமூகப் பணியாளர்கள் ஏற்கெனவேயிருந்த அரசாங்கத்தால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதிலே சமூக நல ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பணிகளிலே சற்று மாறுதல் செய்யவேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது. அதற்குப்பிறகு தான் ஊதிய உயர்வு பற்றியெல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறது.

திரு. பி. துரைராஜ் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் இத்தகைய ஆண், பெண் சோஷியல் ஒர்க்கர்ஸ் எத்தனைபேர்கள் வேலை செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவரங்கள் தற்சமயம் இல்லை, தனிக்கேள்வி போடவும்.

திரு. கே. சகாதேவக் கவுண்டர் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவாவர்களே, சமூக நலப் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2 மாதம், 3 மாதங்களாகச் சம்பளம் கொடுக்காமல், அவர்கள் பட்டினி கிடந்து சாவதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரியுமா? அதுபற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனைபேர் செத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பட்டினி கிடந்து சாகக்கூடிய அளவிற்குக் குறைபாடுகள் இருந்தால், சட்டமன்றம் நடக்க முடியாத அளவிற்குக் கேரோ செய்து கொண்டிருப்பார்கள். அதிலிருந்து அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லை என்றே தெரிகிறது. யாரும் பட்டினி கிடந்து செத்ததாக அதைப்பற்றி புகார்கள் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது, தமிழகத்திலே இரண்டு, மூன்று மாவட்டங்களில் தான் சோஷியல் ஒர்க்கர்ஸ் இருப்பதாகச் சொன்னார்கள். தீண்டாமை ஒழிப்பின் கீழ் அந்த இரண்டு மூன்று மாவட்டங்களில் மட்டும்தான் வேலை இருக்கிறதா? மற்ற மாவட்டங்களில் இல்லையா? அப்படியானால் மற்ற மாவட்டங்களில் அதை விரிவுபடுத்தத் தாமதம் ஏற்படுவது ஏன்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான், மூன்று மாவட்டங்களில் சம்பளம் கொடுக்கும் அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத்தான் சொன்னேன். மற்ற மாவட்டங்களிலும் சோஷியல் ஒர்க்கர்கள் இருக்கிறார்கள். ஆனால், அரிசன நல இலாக்கா மூலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

படிப்பு உதவித்தொகை வழங்குவதற்கான விதிகள்

* 456 வினா----திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனநல துறையில் மாணவர்கள் உதவித் தொகை பெறும் வகையில் தற்போது கடைபிடித்து வரும் மதிப்பெண்களை முன்பு இருந்ததைவிட குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரிசன நலத்துறையினரால் உதவித்தொகை வருமானத்தின்பேரில் அளிக்கப்படுகிறது. ஆகையால் மேற்படி வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, முன்பொருசமயம், அமைச்சரவர்கள் இந்த மார்க் விகிதத்தைக் குறைப்பதாக உத்தேசம் இருப்பதாக ஒரு இடத்தில் பேசியதாகக் கேள்விப்பட்டேன். எனவே, அம்மாதிரி செய்ய உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.